DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.12/2024**

**2025-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 09- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.7 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| பெயர் | - | கிருஷ்ணமூர்த்தி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | அழுக்குசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | வால்பாறை | வயது | - | 59/2025 |
| சாதி | - | | | | |

**<u>09-01-2025</u>**

**( எதிரி ஆஜரில்லை)(எதிரி தரப்பில் 317 CRPC-ன் கீழான சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது காடம்பாறை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 06-05-2023-ம் தேதி காடம்பாறை காவல் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது மாலை 17.30 மணிக்கு ஜோதி வயது 42 கல்லக்குறிச்சி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று காடம்பாறை காவல் நிலைய குற்ற எண் 10/2023, இதச பிரிவுகள் 279, 337 IPC யின் படி வழக்கு பதிவு செய்தேன். **( புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்காக நிலையக்காவல் உதவி ஆய்வாளர் திரு.ரவி என்பவரின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் திரு. சிவக்குமார் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

அ.சா.1 என்னிடம் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார் என்றால் 06-05-2023-ம் தேதி 17.30 மணிக்கு புகார் கொடுத்தார். விபத்து எத்தனை மணிக்கு நடந்ததாக தெரியவந்தது என்றால் அன்றைய தினம் 15.30 மணிக்கு நடந்ததாக தெரியவந்தது. புகாரில் TN 57 BQ 2 என்ற இனோவா காரில் மோதி விபத்து ஏற்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.